# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 17.11.2020**

**முன்னிலை**

## திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,

**மாநில தகவல் ஆணையர்**

...............

**வழக்கு எண்.NC2745/F/2019 (SA798/F/2019)**

திரு K. குப்பன் ... மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்,
கோட்டப்பொறியாளர்,
நெடுஞ்சாலைத்துறை,
துளசி தெரு,
சங்கரன்பாளையம்,
வேலூர் - 632 001.

... பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 22.11.2018 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 26.12.2018 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | - |
| ஆணையத்தின் ஆணை நாள் | 22.08.2019 |
| ஆணை பெறப்படாத மனு நாள் | 28.11.2019 |

******

# ஆணை

இவ்வழக்கு ஏற்கனவே 22.08.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொதுத் தகவல் அலுவலரை 30 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காத காரணத்தினால், இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19

காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (17.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இவ்விசாரணையில் மனுதாரர் திரு கு, குப்பன் மற்றும் பொது அதிகார அமைப்பின் பொதுத் தகவல் அலுவலர், கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, துளசி தெரு, சங்கரன்பாளையம், வேலூர் மாவட்டம் ஆகியோர் தொலைபேசி விசாரணையில் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 22.10.2018 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில்,

- வாலாஜாபேட்டையில் இயங்கி வரும் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனைகளை இணைக்க சுரங்கப்பாதை அமைக்கப்பட்டதன் விவரம் கோப்பின் அடிப்படையில் விவர ஒளிநகல்
- வாலாஜாபேட்டை மாவட்ட தலைமை அரசு மருத்துவமனைகளை இணைக்க சுரங்கப்பாதை அமைக்கப்பட்டதன் டெண்டர் மதீப்பீடு குறித்து விவரம் கோப்பின் அடிப்படையில் விவர ஒளிநகல்.
- வாலாஜாபேட்டை மாவட்ட தலைமை அரசு மருத்துவமனைகளை இணைக்க சுரங்கப்பாதை அமைக்க டெண்டர் இரத்து செய்யப்பட்டதன் விவரம் ஆவணங்களின் அடிப்படையில் விவர ஒளிநகல்,
- வாலாஜாபேட்டை மாவட்ட தலைமை அரசு மருத்துவமனைகளை இணைக்க சுரங்கப்பாதை அமைக்கப்பட்டதன் டெண்ட்ர் விடப்பட்ட நாள், பணி முடிக்கப்பட்ட நாள் குறித்த விவர ஒளிநகல்.
- வாலாஜாபேட்டை எம்.பி.டி.சாலை அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி எதிரே அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிறுத்தம் நிழற்குடை, அமைத்து தரக்கோரி தங்கள் துறையிடம் நிழற்குடை அமைக்ககோரி தனியார் நிறுவனங்கள் விண்ணபித்த விண்ணபத்தின் நகல் கோப்பின் அடிப்படையில் ஒளிநகல்
- வாலாஜாபேட்டை எம்.பி.டி.சாலை அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி எதிரே அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிறுத்தம் நிழற்குடைக்கு தங்கள் துறையின் மூலம் அனுமதி வழங்கப்பட்ட நாள் குறித்த விவரம் கோப்பின் அடிப்படையில் விவர ஒளிநகல்
- தேசிய நெடுஞ்சாலையில் பேருந்து நிறுத்தம் நிழக்குடை அமைக்க உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் துறையிடம் அனுமதிப் பெற்றப்பின்னர் தான் அமைக்கப்பட வேண்டும் என்பதன் அரசாணையின் விவர ஒளி நகல்,
- தேசிய நெடுஞ்சாலையில் பேருந்து நிறுத்தம் நிழக்குடை அமைக்க உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் துறையிடம் அனுமதிப் பெறாமல் கட்டப்பட்டவை என கண்டறியப்பட்ட இடங்கள் விவரம் வாலாஜா தாலுக்கா அளவிலான தகவல்,
- தேசிய நெடுஞ்சாலை ஆற்காடு பாலாற்றுப்பாலத்திலிருந்து வாலாஜா சுங்கசாவடி வரையிலான சாலைப்பகுதியின் மின்விளக்கு அமைக்கப்பட்டதன் எண்ணிக்கை கோப்பின் அடிப்படையில் விவர ஒளிநகல்
- தேசிய நெடுஞ்சாலை ஆற்காடு பாலாற்றுப்பாலத்திலிருந்து வாலாஜா சுங்கசாவடி வரையிலான சாலைப்பகுதியின் மின்விளக்குகளில் தற்பொழுது

பயன்பாட்டில் உள்ள விளக்குகளின் எண்ணிக்கை மற்றும் பயன்பாட்டில் இல்லாத விளக்குகளின் விவரம் கோப்பின் அடிப்படையில் விவர ஒளிநகல்,

- தேசிய நெடுஞ்சாலையில் பேருந்து நிறுத்தம் நிழற்குடை அமைக்க உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் துறையிடம் அனுமதிபெறாமால் கட்டபட்டு அதனை எதிர்த்து புகார் மனு கொடுக்கப்பட்டுள்ள புகார் மனுவின் நகல்,
- தேசிய நெடுஞ்சாலையில் பேருந்து நிறுத்தம் நிழற்குடை அமைக்க உள்ளாட்சி அமைப்புக்ள் தங்கள் துறையிடம் அனுமதிபெறாமல் கட்டப்பட்டுள்ளதை புகாராக கொடுத்த பின்னர் அரசின் விதிமுறைப்படி அரசு அறிவுறுத்தியுள்ள நடவடிக்கை விவரங்கள் கோப்பின் அடிப்படையில் விவர ஒளிநகல்

வழங்கக் கேட்டு 13 இனங்களில் கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, துளசி தெரு, சங்கரன்பாளையம், வேலூர் மாவட்டம்

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காத காரணத்தினால், மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லை என தெரிவித்தும், தான் கோரிய உரிய தகவல்களை அளிக்க கேட்டும், 26.12.2018 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தினால், மனுதாரர் பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீது 22.08.2019 அன்று **SA798/F/2019** ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை 30 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு உரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 28.11.2019 நாளிட்ட மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (17.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய தொலைபேசி விசாரணையில் ஆஜரான மனுதாரர், தான் கோரிய முழுமையான தகவல்களை பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. விசாரணையின்போது பொது அதிகார அமைப்பின் சார்பாக 01.08.2017 மற்றும் 27.09.2019 நாளிட்ட கடிதம் வாயிலாக முழுமையான தகவல்களை மேல்முறையீட்டாளருக்கு வழங்கியதாக தெரிவித்தார். மேலும் விரிவான தகவல்களை மேல்முறையீட்டாளருக்கு வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவல்களையும் ஆணையம் பரிசீலனை செய்ததில், மேல்முறையீட்டாளருக்கு விரிவான மற்றும் முழுமையான தகவல் வழங்கப்படாமல் உள்ளது தெரிய வருகிறது. உரிய தகவல் வழங்காத அலுவலரை ஆணையம் வன்மையாக கண்டிக்கிறது. விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கிறது:

- **மேல்முறையீட்டாளருக்கு ஆணையத்தின் ஆணைக்குப் பிறகும் ஏறத்தாழ இரண்டு வருட காலமாக பதில் அளிக்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலரை தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல**

**விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 1 வார காலத்திற்குள் பதிவஞ்சல் மூலம் ஆணையத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும் என்றும் இப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

- **மனுதாரர்/மேல்முறையீட்டாளர் 22.10.2018 தேதியிட்ட மனுவில் கோரிய விடுபட்ட இனங்களுக்கான முழுமையான தகவல்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, வழங்கப்பட்ட தகவல் மற்றும் மேல்முறையீட்டாளர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

- **மேல்முறையீட்டாளர் 22.10.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) -ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.**

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்.NC2745/F/2019 (SA798/F/2019)</u>**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்,
கோட்டப்பொறியாளர்,
நெடுஞ்சாலைத்துறை,
துளசி தெரு, சங்கரன்பாளையம்,
வேலூர் - 632 001.

<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>

திரு கே. குப்பன், த/பெ குள்ளப்பரெட்டி,
மாநில தலைவர்,
தி. வாலாஜா, ஆர்,டி,ஐ அறக்கட்டளை,
நெ. 3/263, கங்கையம்மன் கோவில் தெரு,
வன்னிவேடு, மோட்டூர்,
வன்னிமேடு அஞ்சல்,
வாலாஜா வட்டம்,
வேலூர் மாவட்டம் - 600 106.

Copy to: Judgement File/ Spare
JE / PA 19.11.2020